பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகத்தின் மாநில முகமை நிறுவனமாக, தமிழ்நாடு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக வரித் துறை செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு, சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில், விவசாயிகள், விவசாயக் குழுக்கள், பொதுத் துறை நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், அரசுசாரா நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள், தனியார் துறை, தொழில் முனைவோர் குழுக்கள் மற்றும் கூட்டு நிறுவனங்கள், உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலை தொடங்க முன்வந்தால், திட்ட மதிப்பீட்டில் 25 சதவிகிதம், அதிகபட்சமாக 50 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கிடவும், தேசிய உணவுப் பதப்படுத்தும் இயக்கத் திட்டத்தில், ஊரக முதன்மைப் பதப்படுத்தும் மையம் அமைக்க, திட்ட மதிப்பீட்டில் 50 சதவிகிதம், அதிகபட்சமாக 2.50 கோடி ரூபாய் வரை மானியமாக வழங்கிடவும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு, மாமன்ற உறுப்பினருடைய கோரிக்கையை எடுத்துச்சென்று, துறையின் மூலமாக உரிய ஆய்வினை மேற்கொண்டு, சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, மாமன்ற உறுப்பினரின் கோரிக்கை ஆவன செய்யப்படும் என்பதை மாமன்ற உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 414, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பவுன்ராஜ், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**414—**

**ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்தல்**

***7948—திரு. க. பவுன்ராஜ்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.

நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியத்தை இரண்டு ஒன்றியங்களாகப் பிரிக்கக் கோரும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பவுன்ராஜ் அவர்கள்.

**திரு. க. பவுன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழி இட்ட காவேரிக்கு சோழ நாடு வாழ வழி கண்டான் சோழ மன்னன் அன்று; இன்று நம் அன்னையோ, காவேரியின் உரிமையை அரசிதழில் வெளியிட, உச்ச நீதிமன்றம் நாடி, (மேசையைத் தட்டும் ஒலி) நீதியை நிலைநாட்டியிருக்கிறார். அத்தகைய வெற்றி கண்ட பொன்னியின் செல்வி, காவேரியின் தாய், மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

முற்பகல் 10-50

பூம்புகார் தொகுதியில் உள்ள செம்பனார்கோவில் ஒன்றியம் 57 ஊராட்சிகளைக் கொண்ட பெரிய ஒன்றியமாகும். இங்கு 1,60,000 மக்கள் வசிக்கிறார்கள். பரந்த நிலப் பரப்புள்ள ஒன்றியமாக உள்ளதாலும், தரங்கம்பாடி தாலுகாவைக் கொண்டுள்ளதாலும், மக்கள் நலம் கருதி, மக்கள் நலம் காக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மக்கள் வசதிக்காக தரங்கம்பாடியினைத் தனி ஒன்றியமாக அறிவித்தால், அப்பகுதி மக்களுக்கு அரசு வழங்குகின்ற நலத் திட்டங்களும், வளர்ச்சிப் பணிகளும் விரைவாகச் சென்றடைவதற்கு ஏதுவாக இருக்கும். செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து பிரித்து, தரங்கம்பாடியைத்

தனி ஒன்றியமாக அறிவிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிப்பது, தரம் உயர்த்துதல் மற்றும் சேர்த்தல் ஆகியவை தொடர்பாக சம்பந்தப்பட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மூலமாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட வேண்டும். இதுகுறித்து, மாவட்ட ஆட்சித் தலைவரால் கூட்டம் நடத்தப்பட்டு, அனைத்துச் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள், பெயர்பெற்ற தன்னார்வத் தொண்டு அமைப்புகள், குடியிருப்போர் நலச் சங்கங்கள் ஆகியோரின் கருத்துகளின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவரால் அனுப்பப்படும் கருத்துரு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அனுப்பப்படும். மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின்பேரில், கருத்துரு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரால் அரசுக்கு அனுப்பிவைக்கப்படும். அதன்மீது அரசு பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை எடுக்கும்.

நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டு ஒன்றியங்களாகப் பிரிக்கக் கோரும் கருத்துரு எதுவும் இதுவரை அரசால் பெறப்படவில்லை. அவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகக் கருத்துரு பெறப்பட்டால், அதுகுறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 415, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.